ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2401/31 - 2024 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.09.13

*2401/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் 154இ 13 ஆம் பிரிவின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான் ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2024.09.11 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கீழ்வரும் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள திருகோணமலை நகரசபை அதிகார எல்லைக்குட்பட்ட உட்துறைமுக வீதியின் கடற்கரையோர 1128 மீற்றர் நீளம் கொண்ட நடைபாதையானது அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டவாறு மாற்றியமைக்கப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

| அட்டவணை 1 | அட்டவணை 2 |
|---|---|
| குறிப்பிட்ட நடைபாதையானது பெயர் எதுவும் குறிப்பிடப்படாமல் பயன்படுத்தப்பட்டு வந்தது. | குறிப்பிட்ட நடைபாதையானது இனிவரும் காலங்களில் “ஓஷியன் ப்ரீஸ் வோக்வே” (Ocean Breeze Walkway) (என அழைக்கப்படும். |
| குறிப்பிட்ட நடைபாதையானது துறைமுக பொலிஸ் நிலையத்திலிருந்து 60 மீற்றர் (அமைவிடப்புள்ளி 8.5679427, 81.2311127) ஆரம்பமாகி சிங்கள மகா வித்தியாலயத்திலிருந்து 51 மீற்றர் தூரத்தில் (அமைவிடப்புள்ளி 8.5757138, 81.2252488) இல் நிறைவுபெறுகின்றது. | குறிப்பிட்ட நடைபாதையானது துறைமுக பொலிஸ் நிலையத்திலிருந்து 60 மீற்றர் (அமைவிடப்புள்ளி 8.5679427, 81.2311127) அமைக்கப்பட்டுள்ள தூபி மற்றும் பெயர் கல்வெட்டு, வரலாற்று கல்வெட்டில் ஆரம்பமாகி சிங்கள மகா வித்தியாலயத்திலிருந்து 51 மீற்றர் தூரத்தில் (அமைவிடப்புள்ளி 8.5747138, 81.2252488) இல் அமைக்கப்பட்ட தூபி மற்றும் பெயர் கல்வெட்டுடன் நிறைவுபெறுகின்றது. |

1A - PG 6873 — 14 (2024/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| ***அட்டவணை 1*** *(தொடர்ச்சி)* | ***அட்டவணை 2*** *(தொடர்ச்சி)* |
|---|---|
| *குறிப்பிட்ட நடைபாதையின் 1128 மீற்றர் பிரதேசமானது ஏற்கனவே 3 தொடக்கம் 4 அடி அகலமானதாகக் காணப்பட்டது.* | *குறிப்பிட்ட நடைபாதையின் பிரதேசமானது சிங்கள மகா வித்தியாலயத்திற்கு முன் உள்ள 110 மீற்றர் பகுதியானது 4 அடி அகலம் கொண்டதாகவும் எஞ்சிய 1018 மீற்றர் பிரதேசமானது 6 அடி அகலம் கொண்டதாகவும் மாற்றியமைக்கப்படுகின்றது.* |
| *குறிப்பிட்ட நடைபாதையில் எதுவித இருக்கை வசதிகளோ, பூச்சாடிகளோ வைக்கப்பட்டிருக்கவில்லை* | *குறிப்பிட்ட நடைபாதையில் 40 மீற்றர் இடைவெளியில் 3 பேர் அமரத்தக்க மரத்தினாலும் துருப்பிடிக்காத சீனச்சட்டி உலோகத்தினாலான இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் 2 இருக்கைகளுக்கு இடையில் சம இடைவெளியில் 2 பூச்சாடிகள் வைக்கப்பட்டு மாற்றியமைக்கப்படுகின்றது.* |
| *குறிப்பிட்ட நடைபாதையில் ஏற்கனவே நடைபாதை வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் பாதசாரிகளுக்கு அந்நடவடிக்கை இடையூறாகவும் இருந்தது.* | *குறிப்பிட்ட நடைபாதைப் பிரதேசத்தில் எந்தவித நடைபாதை வியாபார நடவடிக்கைகளோ அல்லது தரித்து நின்று மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கைகளோ மேற்கொள்ள முடியாத பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது.* |
| *குறிப்பிட்ட நடைபாதையில் எந்தவித வீதி விளக்கு வசதிகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.* | *குறிப்பிட்ட நடைபாதைப் பிரதேசத்தினுள் 12 மீற்றர் இடைவெளியில் ஒரு சூரிய சக்தியில் இயங்கும் வீதி விளக்கு பொருத்தி வெளிச்ச வசதி மேற்கொள்ளப்படுகின்றது.* |
| *குறிப்பிட்ட பிரதேசத்தின் எல்லைக்குள் இணைக்கப்பட்ட நிலப்பரப்பான காக்கைதீவு வெற்றுநிலப் பிரதேசமாகக் காணப்பட்டுள்ளது.* | *குறிப்பிட்ட பிரதேசத்தின் எல்லைக்குள் இணைக்கப்பட்ட நிலப்பரப்பானது சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதாகவும் அப்பிரதேசத்தினுள் சிற்றுண்டி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.* |
| *குறிப்பிட்ட நடைபாதைப் பிரதேசத்தில் எந்தவித ஒளிரும் சமிக்ஞைக் குறியீட்டு பலகைகளோ அறிவுறுத்தல் பலகைகளோ பொருத்தப்பட்டிருக்கவில்லை* | *குறித்த நடைபாதையில் நீளத்தைக் குறிக்கும் 8 சமிக்ஞைக் குறியீட்டு பலகைகளும் 3 மான் குறிக்கிடுவதைக் குறிக்கும் சமிக்ஞைப் பலகைகளும் நடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.* |
| *குறிப்பிட்ட நடைபாதையானது இதுவரை காலமும் பராமரிப்பு மற்றும் மேற்பார்வைப் பொறுப்பு சட்டபூர்வமாக எவருக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.* | *மேற்படி நடைபாதையின் பராமரிப்பு மற்றும் குறித்த பகுதியின் மேற்பார்வை பொறுப்புக் கடமைகள் சட்டபூர்வமாக திருகோணமலை நகரசபைக்குக் கையளிக்கப்படுகின்றது.* |

**எம். செந்தில் தொண்டமான்,**
*கிழக்கு மாகாண ஆளுநர்.*

*கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*2024, செத்தெம்பர் 11.*

EOG *09-0113*